கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

**IA 3/2020**
**in**
**O.S.No.18/2017**

தேதி.05.10.2021

பெயர். தியாகராஜன், ம.சா.2

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் சாட்சியாவேன். இம்மனுவில் எனக்கு தெரிந்த சங்கதிகளை கண்டு நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையென்று உறுதி கூறுகிறேன். இதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனவே என்னுடைய நிருபணவாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளும்படி பிராத்திக்கிறேன்.

**1** ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. வாதிக்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வாதி பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது. அவர் தாக்கல் செய்த வழக்கு எந்த தேதி, மாதம், வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. அந்த வழக்கில் மணிமாறனுக்கு யார் வழக்கறிஞராக இருந்தார் என்ற விபரம் தெரியாது. மணிமாறன் அசல் வழக்கில் நடத்திய விபரம் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உள்ள சங்திகள் மனுதாரர் சொல்லியதை தான் சொல்லியுள்ளேன். இந்த மனு பற்றிய விபரம் எனக்கு எதுவும் தெரியாமல் மணிமாறன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1 ம் எதிர்மனுதாரரின் மேற்படி குறுக்கு விசாரணையை 2 ம் எதிர்மனுதார் ஏற்றுக்கொள்கிறார்.